பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 19 (5—10—68) சனி ★ வெளியூர்: புரட்டாசி 20 (6—10—68) ஞாயிறு [இதழ்: 91

ரூ. 53,925 கோடி!

இராணுவச் செலவாம்

வாஷிங்டன், அக். 5—

அடுத்த ஆண்டில் இராணுவச் செலவுகளுக்காக 7,190 கோடி டாலரை (ரூ. 53,925 கோடி) அமெரிக்க செனட் சபை அனுமதித்திருக்கிறது.

வியட்நாம் போர்ச் செலவுகளும் இந்தத் தொகையில் அடங்கும்.

கலப்பு மணத் தம்பதிகட்குப் பரிசு

அண்ணா ஆட்சியின் அரிய சாதனை

சமுதாயச் சீர்திருத்தத்தில் கழக அரசு இந்தியாவுக்கே வழிகாட்டுகிறது!

சென்னை, அக். 5—

'சாதிகளை ஒழிக்கக் கலப்புத் திருமணமே வழி' என்பதை உணர்ந்து பல்லாண்டுக் காலமாகக் கலப்புத் திருமணத்தை வற்புறுத்தியும் பரப்பியும் வந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்றதும் -- கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கும் வகையில் -- பரிசளிப்புத் திட்டம் ஒன்றை அறிவித்தது நினைவிருக்கலாம்.

சமுதாயச் சீர்திருத்தத்தின் இன்றியமையாத் திட்டமான அது, இப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறது.

கலப்பு மணத் தம்பதிகட்கு தங்கப் பதக்கம் வழங்கும் விழா இத்திங்கள் 11-ஆம் நாள் நடைபெறவிருக்கிறது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே கலப்பு மணத்துக்குப் பரிசளிக்கும் திட்டம் தமிழகத்தில்தான் முதன்முதலாகச் செயல்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்குத் தங்கப் பதக்கம் வழங்குவதென தாழ்த்தப்பட்டோர் நலத்துறை இயக்குநருடனும், நில வருவாய் வாரியத்துடனும் ஆலோசனை கலந்து தமிழக அரசு தீர்மானித்துள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, ஒவ்வொரு கலப்புத் திருமணத்திற்கும் சுமார் ஒரு சவரன் மதிப்புள்ள தங்கப் பதக்கமும், பாராட்டு இதழும் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் பரிசும் பாராட்டு இதழும் பெறப் பின்வரும் தகுதிகள் இருக்க வேண்டும்:—

கலப்புத் திருமணம்—அரிசனங்கள், அல்லது பழங்குடியினர், முன்னேறிய சமுகத்தினரிடையேயும், அரிசனங்கள் அல்லது பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் இடையேயும்; அரிசனங்கள்—அல்லது பழங்குடியினர், மிகப் பிற்பட்ட வகுப்பினர் இடையேயும்; நடைபெற்றதாக இருக்கவேண்டும்.

1967 ஜூலை முதல்நாளன்றோ அதற்குப் பின்னரோ நடைபெற்ற திருமணங்கள்தான் இந்தத் திட்டத்தின்படி பரிசு பெறத் தகுதி பெற்றவையாகும்.

தம்பதிகள் இருவரும் இந்துக்களாக இருக்கவேண்டும்.

இந்தத் திட்டத்தின்கீழ்ப் பரிசு பெற விரும்புவோர், கலப்புத் திருமணம் நடைபெற்ற மாவட்டத்தின் கலெக்டருக்கு மேலே சொன்ன முழு விவரங்களையும் தெரிவித்து விண்ணப்பிக்க வேண்டும்.

இத்தகைய விண்ணப்பங்கள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் 30-ம் நாளுக்குள் செய்யப்பட வேண்டும்

மாவட்டக் கலெக்டர்கள் (சென்னை உட்பட) இந்த விண்ணப்பங்களைப் பரிசீலித்து, பரிசுக்குரியவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள்.

ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 2-ம் நாளன்று இத்தகைய கலப்பு மணத் தம்பதிகளுக்குக் கலெக்டர்கள் தங்கப் பதக்கமும், பாராட்டு இதழும் வழங்குவார்கள்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தங்கப் பதக்கம் அளிக்கக் கோரி விண்ணப்பித்துக் கொண்டுள்ள கலப்பு மணத் தம்பதிகளின் எண்ணிக்கை வருமாறு:—

கோவை 88; மதுரை 79; தஞ்சை 75; திருச்சி 55; சென்னை 52; இராமநாதபுரம் 40; வட ஆற்காடு 16.

கலப்பு மணத் தம்பதிகளுக்குப் பரிசளிக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியானபின் 1—7—68 முதல் 31—3—69-வரை கலப்புத் திருமணம் செய்துகொண்டவர்கட்கு இப்போது பரிசளிக்கப்படவிருக்கிறது.

நள்ளிரவு வரை கூட்டங்கள் நடத்த அனுமதி

சென்னை காவல்துறை அதிகாரி ஏற்பாடு

சென்னை, அக். 4—

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலையொட்டி இரவு 12-மணி வரை கூட்டம் நடத்த அனுமதி கேட்டுக் காவல்துறை ஆணையாளர் குப்புசாமி, தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளார்,

"சென்னை நகரில் இப்போது 120 இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளது; மேலும் 50 இடங்களில் இது அனுமதிக்கப்படும்" என்று அவர் சொன்னார்.

எஸ். எஸ். எல். சி. அக்டோபர் தேர்வு

அக். 14-ஆம் நாள் துவங்கும்

சென்னை, அக். 5—

முன்பு அறிவிக்கப்பட்டிருந்தபடி, எஸ்.எஸ்.எல்.சி., ஓ. எஸ். எல். சி. தேர்வுகள், இம்மாதம் 15-ந் தேதியன்று நடைபெறாது; அதற்குப் பதில், 14-ந் தேதி பிற்பகலில் நடைபெறும்.

அண்ணா உடல் நிலை

மத்திய துணையமைச்சர் பகத் சந்தித்தார்

சென்னை, அக். 4—

பேரறிஞர் அண்ணா அவர்களின் உடல் நிலை விரைந்து தேறி வருகிறது.

இந்திய வெளிநாட்டுத் துறைத் துணையமைச்சர் திரு. பி. ஆர். பகத், அண்ணா அவர்களைச் சந்தித்து உடல் நலம் விசாரித்தார்.

இத்தகவலை, நியூயார்க்கிலிருந்து திரு. க. இராசாராம் தொலைபேசி மூலம் பொதுப் பணி அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கட்குத் தெரிவித்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

துணைவேந்தரின் பதவி துறப்பு

சிதம்பரம், அக். 5—

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பதவியிலிருந்து திரு. பி. சந்திரா ரெட்டி விலகிக் கொண்டார்.

அவர் தமது விலகல் கடிதத்தைப் பல்கலைக்கழக வேந்தரும் மாநில ஆளுநருமான சர்தார் உஜ்ஜல் சிங்குக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பல்கலைக்கழகப் பேரவை, திரு. சந்திரா ரெட்டியின் விலகலை ஏற்றுக்கொண்டு, உதவித் துணைவேந்தர் திரு. ஆதிநாராயணாவை தற்காலிகத் துணைவேந்தராகத் தேர்ந்தெடுத்தது.

பேராசிரியர் அன்பழகன் வெளிநாடு பயணம்

அமைச்சர்கள் வழியனுப்பினர்

விமானநிலையத்தில் சிறப்புமிக்க வழியனுப்பு நிகழ்ச்சி

சென்னை, அக். 5–

நாடாளுமன்ற தி. மு. க. தலைவர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், நேற்று பிற்பகல் 2-30 மணிக்கு விமானம் மூலம் பம்பாய் புறப்பட்டுச் சென்றார்.

இரண்டு மாத காலம் உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று வரவிருக்கும் பேராசிரியர், நேற்று இரவு பம்பாயைவிட்டு நியூயார்க்குக்குப் புறப்பட்டுச் சென்றார்.

நியூயார்க்கில் ஓய்வெடுத்துவரும் பேரறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து அவருடன் சில நாட்கள் தங்கிய பின் தமது பயணத்தைத் தொடருவார்.

பேராசிரியர் அன்பழகனை வழியனுப்பிவைக்கத் திரளான தோழர்கள் மீனம்பாக்கம் விமானநிலையத்தில் குழுமியிருந்தனர்.

அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு கருணாநிதி, கே. ஏ. மதியழகன், செ. மாதவன், எஸ். ஜே. சாதிகபாட்சா மற்றும் 'முரசொலி' மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் ஆகியோர் உள்ளிட்ட கழகச் சட்டமன்ற — நாடாளுமன்ற — மாநகராட்சிமன்ற உறுப்பினர்களும், ஏராளமான கழகத் தோழர்களும் வந்திருந்தனர்.

இராணிப்பேட்டை கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, தியாகராயர் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்களும், வேலூர்—நாமக்கல்—திருச்செங்கோடு — பொத்தனூர்—ஆற்காடு முதலிய வெளியூர் கழகத் தோழர்களும் விமான நிலையத்திற்கு வந்து பேராசிரியரை வழியனுப்பினர்.

(4-ம் பக்கம் பார்க்க)

துரோகத்துக்கு இனி மன்னிப்புக் கிடையாது!

"'எதையும் மன்னித்துவிட அண்ணன் இருக்கிறார்' என்ற துணிவில் சிலர், 'துரோகி'யாகக் கூட முனையலாம்; ஆனால், இனி அதுதான் நடவாது!

"என் ஆருயிர் நண்பனாகிய நீயே கழகத்திற்குத் துரோகம் செய்து---உனக்கு மன்னிப்புக் கிடைத்து விடுமேயானால்---அதன் பிறகு நீ இருக்கிற இடத்தில் நான் இருப்பதாக இல்லை; இதை என் அண்ணன்மீதும், அன்னையின் மீதும் ஆணையாகக் கூறுகிறேன்.

"இந்த உறுதியான நிலையில் உன்னைப்போல் பலரும் இருக்கின்ற காரணத்தால், உடனடியாகத் தவறான போக்கிலிருந்து தங்களை விடுவித்துக்கொண்டு திருத்திக்கொள்கிறவர்களைத் தவிர, மற்றவர்களுக்குக் காலாகாலத்திற்கும் 'மன்னிப்பு' என்பது முயற்கொம்பே ஆகும்.

"'கழகத்திற்குத் துரோகம் செய்ய எண்ணுவதைவிட, கழகத் தலைவர்கள் தூங்கும்போது அவர்கள் தலையில் கல்லைத் தூக்கிப்போட்டுக் கொன்றுவிடலாமே' என்று மக்கள் ஏக்கக் குரல் எழுப்புவது உன் காதில் விழுகிறதா---நண்பா!

"மக்களின் சக்தியை---நம்மை மதியாதவர்கள் பலமுறை பாடமாகப் பெற்றிருக்கிறார்கள்! இம்முறையும் அந்தப் பாடம், அவர்களுக்குக் காத்திருக்கிறது!

"பத்துப் பேர் ஓர் இடத்தைக் கேட்டால் ஒருவர் பெறுவதும்--ஒன்பது பேர் பெற முடியாமற் போவதும் இயற்கைதானே!

"இதைச் சிந்திப்பவர்கள் சீற்றம் தவிர்ப்பர்! சீற்றம் கொண்டிருப்பவர்களும் யாரோ எவரோ அல்லர் -- கழகத்தைத் தங்கள் கண்ணீராலும் செந்நீராலும் வளர்த்தவர்கள்! அவர்கள், எலும்பைக் கம்பாக்கிக் கொடியேற்றியுள்ளனர்! நரம்புகளைக் கயிறாக்கித் தோரணங்கட்டியுள்ளனர்!

"அவர்களில் சிலரது சீற்றத்தை என்னால் உணர முடிகிறது; அந்தக் கோபம், தாயிடம் குழந்தைகொள்ளும் கோபமாகத் தலைவர்களுக்குத் தோன்றுகிறது!

"பத்து நாள் கோபத்தைத் தாங்கிக்கொள்ளலாம்; ஆனால், பத்து நிமிட துரோகத்தைத் தாங்கிக்கொள்ள முடியுமா? -- முடியாது நண்பா -- முடியாது!"

—மறவன் மடல்
'முரசொலி': 6—10—68

தமிழகக் காங்கிரசாருக்கு ம. பொ. சி. இடித்துரை

என்றைக்கேனும் டில்லியின் அநீதியை எதிர்த்ததுண்டா?

தேசபக்தியின் இலக்கணம் தெரியுமா?

சென்னை, அக். 4—

"நமது எண்ணங்களையும், நமது தேவைகளையும் மறுக்கின்ற ஆணவம் பிடித்த கும்பல் டில்லியில் ஆளுகிறது! தமிழ்நாட்டில் முன்பு அரியாசனக் கட்டிலில் அரசோச்ச ஏறி அமர்ந்தவர்கள் டில்லி எசமானனுக்கு எடுபிடியாட்கள்போல் இருந்ததால், டில்லியின் ஆணவம் அப்போது நமக்கு முழுமையாகத் தெரியவில்லை -- இப்போதுதான் தெரிகிறது!

"'தேசபக்தி -- தேசபக்தி' என்கிறார்கள் காங்கிரசுக்காரர்கள்; 'தேசபக்தி' என்றால் முதலில், நாம் இருக்கும் நாட்டுக்கு நன்மை செய்யவேண்டும்; வீட்டுக்குத் துரோகியாகிவிட்டு, 'நாட்டுக்குத் தொண்டு செய்கிறேன்' என்றால், அந்தச் சக்கை வாதத்தை யார் ஏற்பது?

"'தமிழ்நாட்டில் படி அரிசி போடுகிறோம்; மானியம் தாருங்கள்' என்றால், 'யாரைக் கேட்டு படி அரிசி போட்டாய்' என்கிறார் மொரார்ஜி!

"இந்த மாநில மக்களுக்கு இந்த மாநில முதலமைச்சர் படி அரிசி போட மொரார்ஜியைக் கேட்க வேண்டுமாம் --- இதிலிருந்து என்ன தெரிகிறது?

"மக்கள் விருப்பப்படி நடக்கிறது அண்ணாவின் ஆட்சி! மாளிகைச் சீமான்களை மட்டுமே வளர்க்கிறது டில்லி! இந்த ஏறுக்கு மாறான ஆட்சி இந்திய நாட்டின் நலத்துக்குக் கேடு தருமே அன்றிப் பாதுகாப்பாக அமையாது!

"நான் காங்கிரசுக்காரர்களுக்குச் சொல்லிக்கொள்வேன்—மத்திய ஆட்சி மாநில ஆட்சிக்கு ஊறு தேட வரும்போது, எங்களுடன் சேர்ந்து எதிர்ப்பதிலே ஒத்துழையுங்கள்; இல்லையென்றால், 'உங்கள் தலைவிதி அப்படி' என்று நாங்கள் இருந்துவிடுகிறோம்!"

என்று, தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ. அவர்தள், சென்னை–கோபாலபுரம் இளைஞர் தி. மு. க. சார்பில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

"பதவியேற்று ஒன்றரை ஆண்டுகள்கூட முடியவில்லை; இந்த ஒன்றரை ஆண்டுகளுக்குள் உலகம் போற்றும் சரித்திரம் கண்ட முதலமைச்சர் அண்ணாவைத் தவிர, வேறு யாருமிலர்!

ஒன்றரை ஆண்டுக் காலத்தில் இந்திய நாட்டின் மத்திய அமைச்சரவை--பிற மாநிலங்களின் அமைச்சரவை பாராட்ட ஆட்சி புரிந்திருக்கிறார்! அதே சமயம், இந்த மாநிலத்தில் உள்ள காங்கிரசுக்காரர்கள் பாராட்டவில்லை என்பதையும் நானறிவேன்!

யாரும் தன்னை அழித்துக் கொண்டு பிறரை வாழவைக்க நினைக்கமாட்டார்கள்; அப்படிப் பிறர் வாழ வேண்டுமென்று நினைத்தவர்கள் இன்றில்லை!

என் வளர்ச்சியையே பொறுக்க மாட்டாமல் பறித்துக்கொண்ட காங்கிரசுக்காரர்கள், அண்ணாவின் வளர்ச்சியைக் கண்டு பொறுத்துக்கொண்டிருப்பார்கள் என்பது நடக்காத காரியம்!

அஸ்தமனமாகாத பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே அஸ்தமிக்கச் செய்தவர் காந்தியடிகள் ஆவார். அவர் மரபைப் பின்பற்றி அண்ணா அவர்கள் ஆளுவதால், நாம் அவரை ஆதரிக்கிறோம்; அதற்காக மட்டுமல்ல- சில கொள்கைகள்மீதும் ஆதரிக்கிறோம்.

20 ஆண்டுகளாகக் காங்கிரசு ஆட்சியில் என்ன குறைகளைக் கண்டோமோ, அவை, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நிவர்த்திக்கப்படுகிறது. 'இந்தி கூடாது' எனும் தீர்மானம் தமிழகச் சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபோது, காங்கிரசுக்காரர்கள் ஏற்றுக்கொள்ளவுமில்லை --- அதற்கான காரணங்களைக்கூறி எதிர்க்கவும் இல்லை; பேசாமல் இருந்தார்கள்; ஆனால் சி. சுப்ரமணியம் வெளியிலே வந்து, 'பெரிய அரசியல் மோசடி' என்றார்.

ஆனால் மத்திய அரசு இப்பொழுது, 'நீ தமிழகத்தில் இந்தியைப் பரப்பாவிட்டால் நானே பள்ளிகளைத் திறப்பேன்' என்று தமிழக அரசைப் பயமுறுத்திப் பார்க்கிறது!

கோயம்புத்தூரில் ஒரு மத்திய அமைச்சர்மீது கல் விழுந்ததும் ஆயிரம் போலீசை டில்லி அனுப்பியது!

அண்மையில் கேரளத்தில் நடந்த ஒரு நிகழ்ச்சிக்காக 1,200 போலீசை திருவனந்தபுரத்து வீதிகளிலே 'லெப்ட் -- ரைட்' போட வைத்தது!

திருவனந்தபுரத்தில் டில்லிப் பட்டாளம் நுழைய வேண்டுமானால் அங்கேயுள்ள முதலமைச்சர் நம்பூதிரிபாடு—அங்கேயுள்ள ஐ. ஜி. ஆகியோரைக் கேட்டுக் கொண்டுதான் நுழைய வேண்டும்!

'கேட்காமல் நுழைந்தார்கள்' என்றால், சின்னஞ் சிறிய நாடான செக்கோஸ்லோவேகியாமீது செங்கொடிக் கூட்டமான இரஷ்யா படையெடுத்ததற்கும் இதற்கும் என்ன வேறுபாடு?

அவனாவது அந்நியன்; ஆனால், 'நாம் ஒரே நாட்டுக்குள் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்' என்று சொல்லிக் கொண்டு -- இன்னும் சொல்லப்போனால் 'ஒருமைப்பாடு' பற்றிப் பேசும் மத்திய அரசு இப்படிச் செய்வதற்குக் காரணமென்ன?

ஒன்றுமட்டும் தெரிகிறது— மாநில அரசுகளை அடிமைகளாக்கும் ஆதிக்க வெறி பிடித்த வக்கிரபுத்தியாளர்கள் கையில் 'இந்தியத் தாய்' சிக்கித் தடுமாறுகிறாள்! அந்தத் தாயைக் காப்பாற்றத்தான் அண்ணா ஆட்சியை நாம் ஆதரிக்கிறோம்!

தாங்கமுடியாத அளவுக்கு முன்பு காங்கிரசு அரசு வரி போட்டது. அதனால் அண்ணா அவர்கள், 'புதிதாக இனி வரி போட முடியாது; மத்திய அரசு நிதி தர வேண்டும்' என்று கேட்கிறார்; 'நீ போடாவிட்டால் என்ன -- உன் மக்களிடம் நானே வரி போட்டு உனக்குத் தருகிறேன்' என்று டில்லி சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

எங்கெங்கே இடத்தில் மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்ற தி. மு. க. முயல்கிறதோ, அந்தந்த இடத்திலெல்லாம் டில்லி இடையூறாக இருக்கிறது. அத்தகைய இடையூறைப் போக்கக் கூடிய சந்தர்ப்பம் வந்தால் அண்ணா ஆட்சிக்கு நாம் பக்கபலமாக இருக்கவேண்டும்!

காங்கிரசார் மேட்டுக்குடி மக்களை ஆதரித்து அடித்தட்டு மக்களைப் புறக்கணிக்கின்றனர் என்பதற்காகத்தானே ஆட்சியை மாற்றினோம்? தாய்மொழிக்குச் சரியாசனம் தராமல், பேய்மொழிக்கு அரியாசனம் அளிக்கிறார்கள் என்று கோபப்பட்டுத்தானே ஆட்சியை மாற்றினோம்?

நாம் எதற்காக மாற்றினோமோ அதற்காக அண்ணா பாடுபடும்போது, மத்திய அரசு எதேச்சாதிகாரப் போக்கில் குறுக்கிடும்போது, 'மானம் இருக்கிறது' என்பதற்காகவாவது தமிழ்நாட்டுக் காங்கிரசுக்காரர்கள் எதிர்க்கத்தான் வேண்டும்! அவர்கள் எதிர்ப்பதாகத் தெரியவில்லை!

ஒரே ஒரு தடவை டில்லியை எதிர்த்திருக்கிறார்கள்; எப்போதென்றால், இங்கிலாந்துப் பேரரசியார் எலிசபெத் இங்கு வருகை தந்தபோது -- காமராசர் முதலமைச்சராக இருந்த காலத்தில் -- எதிர்த்திருக்கிறார்கள்.

எலிசபெத் சுற்றுலாவைப் படம் எடுத்தார்கள்; இராணிக்குப் பக்கத்தில் காமராசரும் இருந்தார் -- சுப்பிரமணியமும் இருந்தார்; ஆனால், படத்தில் அவர்களைக் காணவில்லை; 'எங்கள் உருவம் இல்லாமல் இருக்கும் இந்தச் செய்திப் படத்தை எங்கள் நாட்டில் திரையிட அனுமதிக்க மாட்டோம்' என்று காமராசரும், சுப்பிரமணியமும் மீண்டும் டில்லிக்கே அந்தப் படத்தைத் திருப்பி அனுப்பிவைத்து விட்டனர்! அப்பொழுதுதான் அவர்கள் டில்லியை எதிர்த்தார்கள்! இது, பிரபலமான பல காங்கிரசுக்காரர்களுக்கே இப்பொழுது தெரியாது.

1947-ல் நம் நாடு சுதந்தர விழாக் கொண்டாடியது; அப்போது சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட வீரர்களைப் பற்றிப் படம் எடுத்துக் காட்டினார்கள்; அந்தப் படத்தில் இராமகிருஷ்ண பரமஹம்சர், தயானந்த சரசுவதி போன்ற மதத் தலைவர்கள்கூட இருந்தார்கள்; சுருங்கச் சொன்னால், வடநாட்டில் 'தலைவர்கள்' என்று பெயரெடுத்தவர்களின் முகங்களெல்லாம் அந்தப் படத்தில் தென்பட்டன; ஆனால், தென்னாட்டிலே வெள்ளையரை எதிர்த்து வீரமுழக்கமிட்ட வீரர்கள் முகங்கள் அதில் காணப்படவில்லை! ஏகாதிபத்தியக் கப்பலுக்கு எதிர்க் கப்பல் ஓட்டினாரே வ. உ. சி.—அவர் முகம் அதில் தெரியவில்லை!

காந்தியடிகள் நடத்திய தண்டி யாத்திரை சத்தியாக்கிரகம் இருக்கிறது; ஆனால், பிரசித்தி பெற்ற வேதாரண்யம் சத்தியாக்கிரகம் இல்லை!

அப்பொழுது காமராசரிடமும், சுப்பிரமணியத்திடமும் இதைப் பற்றிக் கேட்டேன்; தமிழரசுக் கழக மாநாட்டைக் கூட்டி அதில் தீர்மானமும் போட்டேன்; 'விடுதலைப் போராட்ட நூற்றாண்டு விழாப் படத்தில் தென்னாட்டு வீரர்கள் படம் இல்லை; அதனால், அதைத் திரையிட விடமாட்டேன்' என்றேன்; ஆனால் காமராசரும் சுப்பிரமணியமும், 'ஆகட்டும்--- பார்க்கிறோம்' என்றார்கள்! என்ன செய்தார்களோ புரியவில்லை --- இதுவரை ஒன்றும் தெரியவில்லை! 20 ஆண்டுக் காலம் காங்கிரசுக்காரர்கள் இதைத் தவறவிட்டார்கள் என்பதற்காகவும், அண்ணா ஆட்சியை அமைத்தோம்!

சென்னையில் ஆகஸ்டு முதல் நாள் நடந்ததை, 'தடியடி' என்று காங்கிரசுக்காரர்கள் சொன்னார்கள்; ஆனால் டில்லியில் 19-ந் தேதி நடந்த அடி ஈய அடி! தடிக்குள்ளே ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி உறையவைத்து அடித்திருக்கிறார்கள்! இதற்குக் காங்கிரசுக்காரர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்களோ தெரியவில்லை!

காந்தியடிகளுக்கு நூற்றாண்டு விழாக் கொண்டாடுகின்ற நேரத்தில் காந்தியடிகள் சபிக்கின்ற நிகழ்ச்சி டில்லியில் நடந்திருக்கிறது!

பிரெஞ்சுப் புரட்சிபோல் நடக்க இருந்த புரட்சியைத் தன் திறமையில் சமாளித்தது தமிழக அரசு ஒன்றுதான்!"

வீழ்ச்சியுற்ற மக்களை எழுச்சிபெறச் செய்தார் காந்தி

நாட்டை உயர்த்தியதுடன் நமதாக்கியும் தந்தார்

அவர் எண்ணங்களுக்குச் செயலுரு கொடுக்க முனைவோம்

காந்தி பிறந்தநாள் விழாவில் அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, அக். 4—

"அண்ணல் காந்தியார் அரசியலில் நுழைந்த நேரத்தில், இந்நாட்டில் வெள்ளையரை எதிர்த்து ஆயுதம் தாங்கிய வன்முறைப் புரட்சிப் போக்கு ஒருபுறமும், சலுகைகளை நாடிப் பெற்று வாழ வேண்டுமென்ற போக்கு ஒருபுறமும் இருந்தது.

"'இருசாராருடைய போக்கும் பொருத்தமுடையது அல்ல' என்று கூறி, காந்தியார், புதிய ஒரு விடுதலைப் போர் முறையைத் தந்தார்கள்! பிறரை வருத்தாமல் தம்மைத் தாமே வருத்திக்கொள்ளும் அறப்போர் முறையைக் கொடுத்தார்கள்! அறிவுத் துறையில் கண்பெறச் செய்தார்கள்! முடமாகிக் கிடந்த மக்களை எழுச்சி பெறச் செய்தார்கள்! அன்பாலும், பண்பாலும் நாடு சிறக்கப் பாடுபட்டு நாட்டை உயர்த்தி நாட்டை நமதாக்கித் தந்தார்கள்! அவரது கருத்துக்களை நாம் சொல்லில் -- செயலில் -- சிந்தனையில் -- வாழ்க்கையில் கடைபிடித்து நடைமுறைக்குக் கொண்டுவருவோமாக!

"இந்த ஆண்டில் அவரது நூறுவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாட்டுச் சீரணிப் படையினரும் மற்றவர்களும் அவரது கருத்துக்களுக்குக் காட்சி உருக் கொடுத்து அவரது எண்ணங்கள் நிறைவேற எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளுவார்கள்."

இவ்வாறு கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், காந்தி நூற்றாண்டு விழாவுக்கான தமிழகக் குழுவின் ஆதரவில் சென்னை கடற்கரையில் -- காந்தியார் சிலை அருகில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தலைமையேற்றுப் பேசுகையில் குறிப்பிட்டார்; மேலும் அவர் விளக்கியதாவது:--

"புதியதொரு சமுதாயம் காண வேண்டும் என்பதற்காகத் தமது நேரம் -- உழைப்பு -- வாய்ப்பு அத்தனையையும் செலவிட்டவர் காந்தியார்!

வீழ்ந்துகிடந்த மக்களை எழுச்சி பெறச் செய்தார்! அறிவில் குருடராய் இருந்தோர் அறிவுக் கண் பெற்று பார்வைபெறச் செய்தார்.

அறிவில்லாமல் முடமாகிக் கிடந்த மக்களை எழுச்சிபெறச் செய்த ஈடு இணையற்ற ஒரு பெருந் தலைவராக விளங்கிய அவரது நூற்றாண்டு விழாவை இன்று தொடங்கி அடுத்த அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள்வரை ஓராண்டு முழுவதும் கொண்டாடுவதென்று தீர்மானித்திருக்கிறோம்.

வேறு பல நாடுகளுக்கு இல்லாத அளவுக்குக் கனிவளமும், கடல் வளமும், மலைவளமும், சோலை வளமும், சாலை வளமும், மாண்டுபட்ட புகழ்மிக்க வீரமும், வரலாறும் இருந்தும்கூட இந்நாட்டார், தங்களுக்குள்ளே சாதி -- சமயச் சண்டைகளிட்டுப் பிளவுபட்டுக் கிடந்ததாலும், பிறப்பால் உயர்வு -- தாழ்வு கற்பித்ததாலும் மாற்றானுக்கு அடிமையானோம்! இப்படி வீழ்ந்துபட்ட மக்களை எழுச்சி பெறச் செய்தவர் காந்தி!

புத்தர், ஏசுநாதர், நபிகள் நாயகம் என்று அந்த வரிசையில் வைத்து எண்ணத்தக்கவராய் -- சமுதாயம் நலனுற தம் உடல், பொருள், ஆவி அனைத்தையும் வழங்கி மக்கள் சமுதாயம் நிம்மதி பெறப் பாடுபட்டவர் அண்ணல் காந்தி!

அவர் பிறந்தபோது, அழுது கொண்டே பிறந்திருப்பார்! கூடியிருந்தோர், ஆண்பிள்ளை பிறந்தானென்று மகிழ்ச்சியடைந்து சிரித்திருப்பார்கள்!

தாம் பிறந்த மண்ணுக்கு--அதன் மக்களுக்கு -- மனித குலத்துக்கு ஆற்றவேண்டிய அரும்பெரும்

(4-ம் பக்கம் பார்க்க)

மாநில அரசுகட்கு அதிக அதிகாரம்

மத்திய அமைச்சர் முன்னிலையில்

அமைச்சர் செ. மாதவன் வற்புறுத்தல்

உதகை, அக் 3—

"பல உலோகங்கள் விஷயத்தில் இந்தியா ஏராளமான வளத்தைப் பெற்றிருக்கிறது; ஆனால் தாமிரம், ஈயம், துத்தநாகம் போன்ற உலோகக் கனிவளங்கள் தொடர்பாக அதே நிலைமை இருக்கவில்லை"

என்று மத்திய உருக்கு சுரங்க— கனிவளத் துறை அமைச்சர் பி. சி. சேத்தி கூறினார்.

மாநிலங்களின் சுரங்கம் -- புவி இயல் துறை அமைச்சர்களின் மூன்றாவது மாநாட்டின் துவக்க விழாவில் பேசுகையில் மேலும் அவர் கூறியதாவது:—

"இந்த உலோகங்கள் தொடர்பாகத் தீவிரப் பற்றாக்குறை இருப்பதனால் இந்தக் கனிவளத்தைக் கண்டுபிடிக்க எல்லா விதமான முயற்சிகளும்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியப் புவி இயல் ஆய்வுப் பிரிவுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு மாநிலங்களிலும் புவி இயல் ஆய்வுப் பிரிவு மேற்கொண்ட ஆராய்ச்சி நடவடிக்கையினால் பீகார், இராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு முதலிய மாநிலங்களில் ஏராளமான உலோகப் படிவுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது; அத்துடன் மேற்கொண்டு திட்டமிடுவதற்கு ஓர் அடிப்படையை ஏற்படுத்துவதற்கும் உதவியிருக்கிறது.

அமைச்சர் மாதவன்

மாநாட்டைத் துவக்கி வைத்துத் தமிழகச் சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் பேசுகையில், மத்திய அரசு-மாநில அரசுகள் ஆகியவற்றின் புவி இயல் துறைகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கான அவசியத்தை வலியுறுத்தினார்; 'சிறிய அளவில் உள்ள தனிப் படிவுகளை மேம்பாடு செய்து பயன்படுத்துவதில் துணிச்சலான கண்ணோட்டம் வேண்டும்' என்று அவர் கூறினார்.

"இந்நாட்டில் சுரங்கங்கள் கனிப் பொருள்கள் பற்றிய சட்டங்கள் கனிப் பொருள்களைக் குறைந்த செலவில் வெட்டியெடுத்துப் பயன்படுத்துவதற்கு ஊக்கமளிக்கும் வகையில் இருக்கின்றன" என்று மாநாட்டின் பரிசீலனைக்கு அவர் யோசனை தெரிவித்தார். 'அவ்வாறு அந்தச் சட்டங்கள் இல்லையென்றால் தகுந்த திருத்தங்களை மாநாடு தெரிவிக்கலாம்' என்றார் அவர்.

"சுரங்கங்களின் பாதுகாப்பு— கட்டுப்பாட்டுத் துறையில் இன்னும் அதிக பிரத்தியட்சக் கண்ணோட்டம் தேவைப்படுகிறது" என்றார் அமைச்சர்.

"வட்டார அதிகாரிகளுக்கும்— மாநில அரசுகளுக்கும் இன்னும் அதிக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டால் பயனுள்ளதாக இருக்கும்" என்று அவர் குறிப்பிட்டார்.

தமிழகத்தில் தற்போது தீவிர விவசாய உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதையடுத்து நிலத்தடி நீர் கண்டுபிடிப்புக்குத் தமிழக அரசு கொடுத்துள்ள முக்கியத்துவம் பற்றி மாநாட்டிற்குத் தெரிவிப்பதற்கு அமைச்சர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பணியை முடித்து உயிர் விட்டார்! அப்போது அவர் சிரித்துக்கொண்டே இறந்தார்! உலகமே அப்போது அழுதது! நாமனைவரும் கண்ணீர் சிந்தினோம்! இன்னும் சிந்திக் கொண்டே இருக்கின்றோம்!

அந்த அளவுக்கு ஒரு பெரும் சேவையைச் செய்தவர் அண்ணல் காந்தி!

அவர் வழிநின்று சமுதாயம் உய்ய நாம் பாடுபட வேண்டும்; இவ்வகையில் நமக்குப் பெரும் கடப்பாடு உண்டு.

அவர் கட்டளையிட்டபோதெல்லாம் தமிழர்கள் ஏற்று நிறைவேற்றியுள்ளனர். தென் ஆப்பிரிக்காவில் அவர் இனவெறி எதிர்ப்புக் கிளர்ச்சி நடத்திய போது அவருக்கு உறுதுணையாக இருந்தனர் தமிழர்! தில்லையாடியிலே பிறந்து தென் ஆப்பிரிக்கா சென்று வாழ்ந்த வள்ளியம்மை, காந்தியாரது கிளர்ச்சியில் ஈடுபட்டுச் சிறையில் உயிர் விட்டார்! அண்ணல் காந்தியின் பாராட்டுதலைப் பெற்றார்!

காந்தி, தமிழ் மொழி கற்றார்; அடிக்கடி தன்னோடு தமிழில் பேசுவோர் இல்லாமையால் தமது தமிழ் அறிவு துருப்பிடித்து விட்டது என்று கூறிய அவர், தமிழ் கற்கத் தாம் எப்போதும் ஆயத்தமாக இருப்பதாகவும் எழுதியுள்ளார்."

பொது இடங்களில் பட்டாசு வெடிக்காதீர்

சென்னை நகரில் போலீசுத் தடை

சென்னை, அக். 4—

"சென்னை நகரில் பொது இடங்களில் பட்டாசுகள் வெடிக்கக் கூடாது" என்று போலீசுக் கமிஷனர் தடை உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

அக். 10-ம் நாள் முதல் டிசம்பர் 8-ம் நாள் வரையில் இந்தத் தடை உத்தரவு இருக்கும்.

தீபாவளி பண்டிகையின்போது இவ்வாறு பட்டாசுகள் வெடிப்பதால் விபத்தும், பொருட்சேதமும் உண்டாகின்றன; எனவே, பொதுப் பாதுகாப்பை முன்னிட்டு இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த உத்தரவை மீறுபவர்கள் மீது சென்னை நகரப் போலீசுச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படலாம்.

'அணுகுண்டு' என்று சொல்லப்படும் பட்டாசு ரகத்தைத் தயார் செய்வதையும் விற்பனை செய்வதையும் இந்திய அரசு தடை செய்திருக்கிறது.

'அணுகுண்டு' ஏரோப்பிளேன், குட்டிச் சந்திரன், ஸ்புட்னிக், ராக்கெட் போன்ற பட்டாசு ரகங்களையும், அவற்றைப்போல சத்தம் எழுப்பித் தொந்தரவு செய்யக் கூடிய மற்ற பட்டாசு வெடிகளையும், சென்னை நகரில் பொது இடங்களில் வெடிக்கக்கூடாது என்றும் போலீசு கமிஷனர் அறிவித்திருக்கிறார்; குறிப்பாக மருத்துவமனைகள், மருத்துவ இல்லங்கள் ஆகியவற்றுக்கு அரை மைல் தூரத்திற்குள் அவற்றை வெடிக்கக்கூடாது; இந்தரகங்கள் அபாயகரமானவை; காயம் உண்டாக்கக் கூடியவை என்பதால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சேலத்தில் அமைச்சர் முத்துசாமி

அதிக மதிப்பெண் பெற்ற மாணவிகட்குப் பரிசளிப்பு

சேலம், செப். 25—

23—9—68-ல், சேலம் நகராட்சி பாவடி மகளிர் உயர்நிலைப் பள்ளியின் சீரமைப்புக் குழுவினரால் எஸ்.எஸ்.எல்.சி.-யில் அதிக மதிப்பெண்கள் வாங்கிய மூன்று மாணவிகளுக்குப் பரிசு வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவிற்கு அமைச்சர் மா. முத்துசாமி வருகை தந்திருந்தார். மாணவிகள் அமைச்சருக்கு ஆரத்தி எடுத்து வரவேற்பளித்தனர்; தலைமை ஆசிரியர் திருமதி பேகம்கான் பூச்செண்டு கொடுத்தார்; பின், தேநீர் விருந்து நடைபெற்றது.

அமைச்சருக்குப் பள்ளி சீரமைப்புக் குழுவின் சார்பில் குழுவின் தலைவர் பி. எஸ். மாணிக்கம் வரவேற்பு மடல் வாசித்தளித்தார்.

விழாவிற்கு திரு. ஈ. ஆர். கிருட்டினன் எம்.எல்.ஏ. தலைமை வகித்தார்.

பின் அமைச்சர், அதிக மதிப்பெண் வாங்கி வெற்றிபெற்ற மூன்று மாணவிகளுக்கும் எவர்சில்வர் குடம் பரிசு அளித்தார்.

பள்ளிப் பாடகிக்கு பட்டாடைப் பரிசு அளித்தார்.

அமைச்சர் பேசும்பொழுது, இப்பள்ளியின் சீரமைப்புக் குழுவினர் அதிக மதிப்பெண் வாங்கிய மாணவிகளுக்கும், பள்ளிப் பாடகிக்கும் பரிசு வழங்கியதுபோல் மாணவிகளுக்குள் உடல் வளமுள்ள -- அதாவது, பள்ளி விளையாட்டுகளில் வெற்றிபெற்ற மாணவிகளுக்கும் அடுத்த ஆண்டிலிருந்து பரிசு வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

சீரமைப்புக் குழுவினர் இப்படி ஒரு விழா நடத்துவதைப் பாராட்டினார்.

பின், பள்ளி மாணவிகள் இசை விழா நடத்தினர்.

கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை லிமிடெட்

மூங்கில்துறைப்பட்டு & அஞ்சல்,

கள்ளக்குறிச்சி வட்டம், தென்னாற்காடு மாவட்டம்

லாரிகள் தேவை

1968-69-ம் பருவத்தின் கரும்பு அறைப்பு நவம்பர் மாத மத்தியில் துவங்கி மே மாதம் முடிய நீடிக்கும். ஆலைக்குக் கரும்பு ஏற்றிவர லாரி சொந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன.

வாடகை விகிதங்கள்

1 முதல் 15 மைல் வரை டன்னுக்கு ரூ. 6.75.

16 முதல் 25 மைல் வரை மேற்கொண்டு ஒவ்வொரு மைலுக்கும் டன்னுக்கு 25 பைசா கூடுதலாகும்.

26 முதல் 31 மைல் வரை மேற்கொண்டு ஒவ்வொரு மைலுக்கும் டன்னுக்கு 20 பைசா கூடுதலாகும்.

32 மைல் முதல் மேற்கொண்டு ஒவ்வொரு மைலுக்கும் டன்னுக்கு 15 பைசா கூடுதலாகும்.

ஒவ்வொரு நடைக்கும் குறைந்தபட்சம் 6 டன் வாடகை கொடுக்கப்படும். தொடர்ச்சியாக 7 நாட்களுக்கு ஓடிய பின்னும் நாள் வருமானம் ரூ. 105-க்குக் குறைந்தால் சராசரி தினம் ரூ. 105-ம் குறைந்தபட்ச வாடகை வருமானம் உத்தரவாதம் அளிக்கப்படும்.

மேலும் ஆலையில் வாட்கைக்கு அமர்த்தப்படும் தேதியிலிருந்து பருவ இறுதிவரை ஓடும் லாரிகளுக்கு மொத்த வாடகை வருமானத்தில் 3 சதம் போனஸ் கொடுக்கப்படும்.

விருப்பமுள்ள லாரி சொந்தக்காரர்கள் 16-10-1968-ந் தேதி. ஆலை அலுவலகத்திற்கு ரூ. 2.50 ஸ்டாம்பு காகிதத்துடன் வந்து ஒப்பந்தம் செய்துகொள்ளலாம். காரணம் காட்டாமல் ஒப்பந்த மனுக்களை நிராகரிக்கப் பொது நிர்வாகிக்கு அதிகாரமுண்டு.

பொது நிர்வாகி

வேப்பலோடை

உப்புத் தொழிலாளர் சங்கம்

வேப்பலோடை உப்புத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளையொட்டி, அண்ணா அவர்கள் நியூயார்க் மெமோரியல் மருத்துவமனையிலிருந்து வெளியே வரும் நாள்வரை நாள்தோறும் மாலை 6-20 மணிக்கு பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முஸ்லிம் லீக்

7 பேர்மீது ஒழுங்கு நடவடிக்கை

"கீழ்க்காணும் ஏழு பேர்களும் முஸ்லிம் லீகின் சட்ட திட்டங்களுக்கும், கொள்கைகளுக்கும், செயல்முறைத் திட்டங்களுக்கும் பாதகமான முறையிலும், மாறாகவும், முஸ்லிம் லீகின் வேலைக்கும் நடவடிக்கைகளுக்கும் வளர்ச்சிக்கும் குந்தகம் உண்டாகும் விதத்திலும் செயல்பட்டிருப்பதால், அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென 1—10—68, 2—10—68 ஆகிய தேதிகளில் காயிதே மில்லத் இஸ்மாயில் எம்.பி. அவர்கள் தலைமையில் நடைபெற்ற தமிழ்நாடு முஸ்லிம் லீக் செயற்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

அவ்விதம் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுத்து முடிவடையும் வரை இடைக்காலத்தில் மேற்படி ஏழு பேர்களையும் முஸ்லிம் லீக் உறுப்பினர் பதவியிலிருந்து தற்காலிகமாக விலக்கியிருப்பதாகவும், இக்காலத்தில் முஸ்லிம் லீக் உறுப்பினர் என்ற முறையில் அவர்கள் எவ்வித உரிமையும், சலுகையும் அனுபவிக்கக் கூடாதென்றும், கையாளக் கூடாதென்றும் மேற்படி கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது.

ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளானோர்:—டாக்டர் அபிபுல்லா பேக் (சென்னை மேயர்); டி. ஏ. எஸ். அப்துல்காதர் (பொருளாளர், தமிழ்நாடு முஸ்லிம் லீக்); கே. பி. ஷெய்குத்தம்பி; பஷீர் அகமது; ஜனாப் அகமது ஜமால் கான்; ஏ. கே. ஜமாலி; ஏ. எம். யூசுப்.

காந்திக்குப் பின் அண்ணா

கருநாடகக் காங்கிரசு முதல்வர் பாராட்டு

"அறிஞர் அண்ணா அவர்களைப் போல் மக்கள் அன்பைப் பெற்ற தலைவர்கள் உலகத்தில் வேறு எங்கும் இருக்க முடியாது. இந்த நூற்றாண்டில் அண்ணாவைப் போன்ற தலைவரைக் காணமுடியாது.

"அண்ணா அவர்களைப்போல் மற்றவர்களால் எழுத -- பேச -- உழைக்க இயலக்கூடும்! ஆனால், அவரைப்போல் அத்தனை பேருடைய அன்பையும் பெறுவதென்பது யாராலும் முடியாது.

"மைசூர் மாநிலத்தைச் சேர்ந்த 75 வயது நிரம்பிய காங்கிரசுத் தலைவர் ஒருவர் — முன்பு அமைச்சராக இருந்தவர் — என்னைச் சந்தித்தபோது, அண்ணா அவர்களின் உடல் நிலையை விசாரித்துவிட்டு— 'அவர் குணமாகித் திரும்ப வேண்டும்' என்று கூறிவிட்டு —'பத்தாண்டுகளுக்கு முன் அவரை யாரோ என்று நினைத்தேன்; ஐந்து ஆண்டுகள் கழித்து, 'திறமையுள்ள அரசியல்வாதி' என்று அறிந்தேன்; இன்று, 'மகாத்மா காந்திக்குப் பின் பெரும்பாலான மக்களால் போற்றப்படும் தலைவராக இவர்தான் இருக்கிறார்' என நினைக்கிறேன்' என்று கூறினார்.

"முதுபெரும் காங்கிரசுக்காரர்களாலேயே அண்ணா பாராட்டப்படுகிறாரே --- இதைவிட வேறென்ன பெரிய பெருமை வந்துவிட முடியும்?

"நியூயார்க் நகருக்குச் செல்கின்ற நான், அறிஞர் அண்ணா அவர்களுக்குச் சிறப்பான முறையில் அறுவை சிகிச்சை நடத்திய டாக்டர் மில்லர் அவர்களைச் சந்தித்து தமிழகத்தின் நன்றியை —பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வேன்."

--பேராசிரியர் க. அன்பழகன்

(வழியனுப்புக் கூட்டத்தில்)

சென்னையில் காந்தி நூற்றாண்டுவிழா

அறிஞர் அண்ணா செய்தி அனுப்பினார்

சென்னை, அக். 4—

அறவழி நின்று இந்நூற்றாண்டில் நாட்டின் விடுதலைக்குப் போராடியவரும் உலகிற்குப் புதுவழி காட்டியவருமான காந்தியாரின் நூற்றாண்டு விழாவை இந்தியாவும், உலக நாடுகளும் அக்டோபர் 2-ல் கொண்டாடின; இந்நாள் முதல் அடுத்த ஆண்டு காந்தி பிறந்த நாள்வரையில் இது, காந்தி நூற்றாண்டு விழாவாகக் கொண்டாடப்படும்.

அக். 2-ம் நாளன்று சென்னை—மெரினா கடற்கரையில் காந்தி சிலைக்கு அருகில் கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், அனைத்துக் கட்சித் தலைவர் தலைவர்களும் கலந்துகொண்டு, 'காந்தியாருக்கு நீங்காத ஒரு நினைவுச் சின்னத்தை, இந்த நூற்றாண்டு விழாவில் நாம் உருவாக்க வேண்டும்; அவர் நமக்குக் கற்பித்த --- வாழ்வில் கையாண்ட உயரிய தத்துவங்களின் மூலம்தான் சமதர்மச் சமுதாயத்தைக் காணமுடியும்' என்று வலியுறுத்திக் கூறினர்.

சென்னை பாலர் அரங்கத்தில், காந்தியாரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் 'மகாத்மா' என்ற திரைப்படமும், 'மகாத்மா காந்தி --- நூறு ஆண்டுகள்' என்ற நூலும் வெளியிடப்பட்டன.

இந்த நிகழ்ச்சியின்போது, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அனுப்பியிருந்த தனிச் செய்தி படிக்கப்பட்டது.

கழக வேட்பாளருக்குப் பொறுப்புத் தொகை

நகரசுத்தித் தொழிலாளர்கள் கட்டினர்

சென்னை, அக். 3—

சென்னை மாநகராட்சித் தேர்தலையொட்டி இன்று பலர் வேட்பு மனுத் தாக்கல் செய்தனர்.

70-வது வட்ட கோமளீசுவரன் பேட்டை தொகுதிக் கழக வேட்பாளராகத் தோழர் என. கே. சாகுல் அமீது இன்று வேட்பு மனுத் தாக்கல் செய்தார்.

அவருக்கான பொறுப்புத் தொகையான ரூபாய் நூறையும், புதுப்பேட்டை நகரசுத்தித் தொழிலாளர் சங்கத்தினர் செலுத்தினர்.

தமிழக அரசின் பரிசுச் சீட்டு

குலுக்கல் பற்றி விளக்கம்

குழுவினர் விவரம்

சென்னை, அக். 5—

தமிழக அரசின் பரிசுச் சீட்டுக்கள் முதல் குலுக்கல் அக். 14-ம் நாளன்று, சென்னையில் ராஜாஜி மண்டபத்திலும், பாலர் அரங்கிலும் நடைபெறும்.

விற்பனைக்காகக் கொடுக்கப்பட்ட 80 இலட்சம் பரிசுச் சீட்டுக்களில், கடந்த வியாழக்கிழமை வரையில், 75 இலட்சம் சீட்டுகள் விற்பனையாகியிருக்கின்றன; பாக்கி ஐந்து இலட்சம் சீட்டுகளும் அக்டோபர் 13-ந் தேதிக்குள் விற்பனையாகிவிடும்.

இனி ஒவ்வொரு மாதமும் பரிசுச் சீட்டுக் குலுக்கல் நடத்தப்படும்; குலுக்கல் ஒவ்வொரு மாதமும் 20-ந் தேதி நடைபெறும்.

மொத்தம் 30 அல்லது 40 இலட்சம் டிக்கெட்டுகள் மூன்று அல்லது நான்கு வரிசையாக (சீரீஸ்) விற்கப்படும்.

அடுத்த மாதக் குலுக்கலுக்கு அக்டோபர் 15-ந் தேதிமுதல் சீட்டுகள் விற்கப்படும்.

அதற்கடுத்த மாதங்களில், சீட்டுகள் ஒவ்வொரு மாதமும் 21-ந் தேதி விற்க ஆரம்பிக்கப்படும்.

காலக்கிரமத்தில் மாறி மாறி மாவட்டத் தலைநகர்களிலும் குலுக்கல் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இராஜாஜி மண்டபத்தில் ஒரு குழுவின் முன்னிலையிலும், பாலர் அரங்கில் ஒரு குழுவின் முன்னிலையிலும் சீட்டுக்கள் குலுக்கப்படும்.

சீட்டு குலுக்கப்படும் மேடையில் 6 'டிரம்'கள் வரிசையாக வைக்கப்படும்; ஒவ்வொரு 'டிரம்'மிலும் 0-முதல் 9-வரை உள்ள 10 எண்கள் கொண்ட அட்டைகள் போடப்பட்டு இருக்கும்; ஆனால் இந்த எண்கள், வெளியே தெரியாதபடி இருக்கும்.

ஒவ்வொரு 'டிரம்'மிலும் உள்ள எண்கள் நன்ருகக் குலுக்கப்பட்டு ஒரு எண் எடுக்கப்படும். இதுபோல், 6 'டிரம்'களிலும் எண்களிலிருந்து 6 எண்கள் எடுக்கப்படும்; அவை வரிசையாக வைக்கப்பட்டு, அந்த வரிசை எண் பரிசுபெற்ற எண்ணுக அறிவிக்கப்படும்.

இதே முறையில் முதலாவது—இரண்டாவது—மூன்ருவது பரிசுகளுக்குரிய எண்கள் குலுக்கி எடுக்கப்படும்.

நடுவர்களிடம் ஒவ்வொரு வரிசையிலும் விற்கப்பட்டு இருக்கும் டிக்கெட்டுகளின் எண்களும், விற்கப்படாத டிக்கெட்டுகளின் எண்களும் கொடுக்கப்படும். விற்கப்படாத டிக்கெட்டுகளின் எண்கள் குலுக்கலில் வந்துவிட்டால் மீண்டும் குலுக்கப்படும்.

பரிசு பெற்றவர்களின் பட்டியல், முக்கியமான நாளிதழ்களிலும், அரசாங்கக் 'கெசட்'டிலும் வெளியிடப்படும்.

முதலாவது, இரண்டாவது பரிசுகளைப் பெற்றவர்கள், தங்கள் பரிசுகளை, பரிசுச் சீட்டு தலைமை அதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

மற்ற பரிசுகளைப் பெற்றவர்கள் அந்தந்த மாவட்ட அரசாங்கக் கஜானுக்களில் பரிசுச் சீட்டுக்களைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம்.

நடுவர் குழு

பரிசுச் சீட்டுக் குலுக்கலை மேற்பார்வையிட இரு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன; முதல் குழுவில் பி. சந்திரா ரெட்டி, வி. பாலசுந்தரம் (மின்சார போர்டு தலைவர்), ரங்கா (அக்கவுண்டண்டு ஜெனரல்), எம். ஏ. சிதம்பரம், இலட்சுமிநாராயணன் (இந்தியன் பாங்கி தலைவர்) ஆகியோர் உள்ளனர்.

இரண்டாவது குழுவில் எஸ். கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற நீதிபதி), ஜெ. சிவானந்தம் (சென்னை சர்வீசு கமிஷன் தலைவர்), கே. எஸ். சிவசுப்பிரமணியன் (ரெவினியூ போர்டு உறுப்பினர்), எஸ். நாராயணசாமி (ஷெரீப்), பம்பா (பஞ்சாப் நேஷனல் பாங்கி மானேஜர்) ஆகியோர் உள்ளனர்.

மாநகராட்சித் தேர்தல்

தோழமைக்கட்சிகளின் வேட்பாளர்கள்

சென்னை, அக். 5—

சென்னை மாநகராட்சித் தேர்தலில் தி. மு. கழகம் உடன்பாடு கொண்டுள்ள கட்சிகளின் வேட்பாளர்கள் விவரம் வருமாறு:—

முஸ்லிம் லீக்

வட்ட எண் பெயர்

14. வள்ளல் சீதக்காதி நகர்
சிலார் மியான்

26. டாக்டர் விசயராகவலு நகர்
எம். ஏ. லத்தீப்

47. புளியந்தோப்பு
எச். ஏ. அமீர்

69. புதுப்பேட்டை
எம். அப்துல் காதர்

74 அமீர் மகால்
இ. ஏ. என். சுலைமான்

75. உமறுப்புலவர் நகர்
டாக்டர் கலிபத்துல்லா

84. நேரு நகர்
டாக்டர் நசீர் முகம்மது

சுதந்தரா

6 நாராயணப்ப நாயக்கன் [தோட்டம்
கே. குசால்தாஸ்

18. சௌகார்பேட்டை
எஸ். சுதர்சன்

31. கொசப்பேட்டை
டாக்டர் பி. பாலகிருஷ்ணன்

95. மயிலாப்பூர்
ஏ. கே. சீனிவாசன்

102. கலைவாணர் நகர்
சி. ஆர். நரசிம்மன்

105. தியாகராயநகர்
என். எஸ். இராமநாதன்

116. காமராஜ் நகர்
வி. தேவநாதன்

வலது கம்யூனிஸ்டு

2. ம. பொ. சி. நகர்
பி. நமசிவாயம்

23. செரியன் நகர்
ஜி. கண்ணன்

தமிழரசுக் கழகம்

50. தட்டாங்குளம்
வரதராசன்

89. திருவல்லிக்கேணி
பட்சிராசகோபாலன்

உழைப்பாளர் கட்சி

7. சிங்காரத் தோட்டம்
ஜி. இராசரத்தின நாயகர்

108. வ. உ. சி. நகர்
ஜி. இராசமாணிக்க நாயகர்

குறிஞ்சிப்பாடியில்

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்

குறிஞ்சிப்பாடியில், குடும்பக் கட்டுப்பாடு மற்றும் குழந்தைகள் நலத் திட்டத்தை சுகாதார அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்கள், 7—10—68 மாலை 5 மணிக்குத் துவக்கிவைப்பார்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

6--10--68

மதுரை

44-வது வட்ட எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு பழைய குயவர்பாளையம் சாலை அலங்கார் தியேட்டர் அருகில்; தலைவர்: ஏ. வி. முத்து; பேசுவோர்: நாவலர் நம்பி, பி. எஸ். மணியம் எம்.எல்.ஏ., எம். எம். முத்தரசு, கு. திரும்பதி, கா. வெ. சரவணன்.

கடலூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு மஞ்சை நகர்த் திடலில்; தலைவர்: இரெ. இளம்வழுதி; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், கி. தண்டபாணி எம்.சி., வி. நடேசன், கே. ஜெயராமன் எம்.சி., கே. முத்து எம்.சி., சரோஜா செயராமன் எம்.சி., ஆர். நடராசன் எம்.சி. ஏ. சுப்பிரமணியம், பி. கண்ணன்.

நாச்சியார்கோயில்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு வடக்கு வீதியில்; தலைவர்: இரா. அரங்கநாதன்; பேசுவோர்: டி. வி. நாராயணசாமி எம்.எல்.சி., கோ. சி. மணி எம்.எல்.சி., சி. கிருட்டினமூர்த்தி எம்.எல்.ஏ., வழக்கறிஞர் எஸ். கோதண்டராமன், சந்தானம், சு. பத்மநபன், ந. சுவாமிநாதன், கு. இராசமாணிக்கம், மு. இசுமத் பாட்சா, இரா. இராமதாசன், தி. இராமலிங்கம், பொ. கோவிந்தராசு, வி. கே. இராமசாமி, இரா. கேசவன், அ. முகம்மதலி, எம். எஸ். ஜப்பார்.

சென்னை 33-வது வட்டம்

இராணி அண்ணு மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு புரசைவைக்கோற்காரன் வீதியில்; தலைவர்: கோ. சி. வாசன்; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணிமுத்து, கி. மனோகரன் எம்.பி., சி. சிட்டிபாபு எம்.பி., கே. ஏ. கிருட்டினசாமி எம்.ஏ. பி.எல்., மு. கன்னியப்பன் எம்.சி.

அருப்புக்கோட்டை

நகர தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு பாவடித் தோப்பில்; தலைவர்: எம். எஸ். மாரிமுத்து; பேசுவோர்: கேரளசுந்தரம், சிவ. சண்முகசுந்தரம், ஆ. குருசாமி, ப. பெ. ந. நல்லதம்பி.

தாம்பரம்

அண்ணு பிறந்த நாள் விழாவும், அண்ணு உடல் நோய் தீர்த்த டாக்டர் மில்லருக்குப் பாராட்டு விழாவும்; மாலை 6-30 மணிக்கு மேற்கு தாம்பரம் பாரதி தெருவில்; தலைவர்: எல்லை. இராசமாணிக்கம்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், சிட்டிபாபு எம்.பி., முனு. ஆதி எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி, வி. பி. அகிலன்.

7--10--68

மேலப்பாளையம்

அண்ணு அறிவொளி மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு தெற்கு தைக்காத் தெருவில்; தலைவர்: வெ. இ. நா. மீரான்; பேசுவோர்: எட்மண்டு எம்.எல்.ஏ., தாடி அபுதாலிப், செ. கா. மு. யூசுப் எம்.சி., பி. எஸ். மசூத் எம்.சி., நெ. மு. அபூபக்கர் எம்.சி., கி. மீ. காஜா மைதீன், ப. செ. அ. மைதீன்.

கடலூர்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு முதுநகர் செட்டிக் கோவில் திடலில்; தலைவர்: கி. தண்டபாணி எம்.சி.; பேசுவோர்: செ. மாதவன், இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ., ஏ. வி. தண்டபாணி, கி. கோவிந்தராசன், கே. எம். வேலு, வி. நடேசன், கே. செயராமன், கே. மூத்து, சரோஜா செயராமன், ஆர். நடராசன், சீ. இரணியன், ஏ. சுப்பிரமணியன்.

8--10--68

காஞ்சி

வட்ட தி. மு. க. சார்பில் மாலை 5-மணிக்கு தாமலில்; தலைவர்: டி. சீனுவாசன்; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே சாதிக் பாட்சா, சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ., என். கிருட்டினன் எம்.எல்.ஏ., கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி எம்.சி., சரசுவதி வெங்கடேசன் எம்.சி., சி. ஆறுமுகம், தா. மு. கண்ணன், வி. எம். கோபால்.

வாலாசாபாத்

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு கோபால் நாயுடு தெருவில்; தலைவர்: தோ. இஸ்மாயில்; பேசுவோர்: அமைச்சர் எஸ். ஜே. சாதிக்பாட்சா, சி. வி. எம். அண்ணுமலை எம்.எல்.ஏ., கே. எம். இராசகோபால் எம்.எல்.ஏ., கே. டி. எஸ். மணி எம்.சி., டி. சீனுவாசன், சி. ஆறுமுகம், மற்றும் பலர்.

கட்டச்சின்னுன்பட்டி

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அண்ணு திடலில்; தலைவர்: இரா. கந்தசாமி; கொடியேற்றுபவர்: க. பெரியசாமி; பேசுவோர்: சேரள சுந்தரம், மு. காதர்சா, அ. பாலமுருகேசன், பொன் சீனிவாசன், வீரமணி, மு. நடராசன், ச. அருணகிரி, மற்றும் பலர்.

நத்தம்

எம். ஜி. ஆர். மன்றத் திறப்பு; மாலை 6-மணிக்கு கீழ் அருங்குணம் மாரியம்மன் கோயில் திடலில்; தலைவர்: ஏ. இராசாராமன்; திறப்பாளர்: இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ; கொடியேற்றுபவர்: ஏ. வி. தண்டபாணி; எம். ஜி. ஆர். படத் திறப்பு: கி. கோவிந்தராசன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ. மு. கலியபெருமாள், துரை. அன்பரசன், இரா. தேவநாதன், கே. செல்வராசு.

சென்னை 57-வது வட்டம்

திருவள்ளுவர் மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு நம்மாள்வார் பேட்டை சுப்பராய செட்டித் தெருவில்; தலைவர்: த. சா. மூர்த்தி; பேசுவோர்: ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ., இளம்பரிதி, மற்றும் பலர்.

க. அன்பழகன்

வெளிநாடு பயணம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவை அடுத்துள்ள பஹாமாசில் காமன்வெல்த் நாடாளுமன்ற சங்கத்தின் மாநாடு நடைபெறுகிறது; இந்திய நாடாளுமன்றப் பிரதிநிதிகள் ஐவர் இம்மாநாட்டில் பங்கேற்கின்றனர்; அவைத் தலைவர் என். சஞ்சீவரெட்டி தலைமையில் செல்லும் இக்குழுவில் இடம் பெறும்படி விடுக்கப்பட்ட அழைப்பினை ஏற்றுப் பேராசிரியர் இந்தப் பயணத்தை மேற்கொண்டிருக்கிருர்.

நியூயார்க்கை அடையுமுன் அவர் ஏதன்சு, ரோம், பாரிஸ், இலண்டன் ஆகிய நகரங்களின் வழி தங்கிச் செல்வார்.

இலண்டன் மாநகர தமிழ்ச் சங்கத்தின் விழா ஒன்றிலும் அவர் பங்குகொள்வார்.

மாநாடு முடிந்து நாடு திரும்பும் வழியில் அவர் ஜப்பான் வழியாக வருவார்; டோக்கியோ, ஹாங்காங், சிங்கப்பூர் ஆகிய நகர்களில் சில நாட்கள் தங்குவார்.

தி. மு. க. தேர்தல்

அலுவலகங்கள் திறப்பு

★

சென்னை 113-வது வட்டம்

தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா 6—10—68 காலை 9 மணிக்கு ஆற்காட்டுச்சாலை பவர் அவுஸ் அருகில் காஞ்சி மணிமொழியார் தலைமையிலும்—அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் முன்னிலையிலும் நடைபெறும்; முரசொலி மாறன் எம்.பி. திறந்துவைப்பார்; தொடர்ந்து ஊழியர் கூட்டமும் நடைபெறும். கழகத் தோழர்களும் துணை மன்றத் தோழர்களும் கலந்துகொள்ளுமாறு பொறுப்பாளர் இரா. ஆனந்தன் கேட்டுக்கொள்கிருர்.

சென்னை 114-வது வட்டம்

சென்னை 114-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா, ஆற்காட்டுச்சாலை ராம் தியேட்டர் அருகில் 6—10—68 காலை 10 மணிக்கு நடைபெறும்; தலைவர்: ஏ. எஸ். இராமன் எம்.சி; அலுவலகத் திறப்பு: பி. சிவசங்கரன்எம்பி.; அண்ணு படத் திறப்பாளர்: முரசொலி மாறன் எம்.பி.; கொடியேற்றுபவர்: செ. கண்ணப்பன்; காஞ்சி மணிமொழியார், எம். கோபால் எம்.எல்.ஏ., மற்றும் பலர் பேசுவர்.

பொதுப்பணி அமைச்சர்

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

அக். 6: காலை 5-50 மணி: மாயவரம்; 8 மணி: நன்னிலம்; 9-30 மணி: தஞ்சாவூர்—தமிழ்நாடு பெருவழித்துறை பொறியியல் அலுவலர் சங்க விழா; மாலை 4 மணி: கரூர்—பெரியாரின் 96-வது ஆண்டு பிறந்த நாள் விழா (கார் பரிசளிப்பு விழா).

அக் 7: ஒரத்தநாடு தொகுதி.

உணவு அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

அக். 6: முற்பகல் 11-30 மணி: கரூர்—வர்த்தகக் கழக விழா; இரவு: இராசிபுரம்.

அக். 7: இராசிபுரம் தொகுதி.

சட்ட அமைச்சர்

செ. மாதவன்

நிகழ்ச்சிகள்

அக். 7: காலை 9-30 மணி: கீழ் கூத்தப்பாக்கம் — விவசாயக் கிடங்கு திறப்பு விழா; மாலை 5 மணி: பெரும்பாக்கம்—மின் விளக்கு ஏற்றுதல்; இரவு 7 மணி: கடலூர்—புதுநகர் பொதுக்கூட்டம்.

சென்னை 26-வது வட்ட தி.மு.க. பொறுப்பாளர்

மாநகராட்சித் தேர்தல் அலுவல்களைக் கவனிக்கும் பொருட்டு, சென்னை 26-வது வட்ட தி. மு. க. பொறுப்பாளராக கிளைக் கழக அவைத் தலைவரான தோழர் கே. ஏ. சமது அவர்களைத் தற்காலிகமாக நியமித்துள்ளதாக மாவட்டச் செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிருர்.

சங்கொலிகுப்பம்

பேருந்து நிலையத் திறப்பு

சங்கொலிகுப்பம் பேருந்து நிலையத் திறப்பு விழா 6—10—68 மாலை 4-மணிக்கு வழக்கறிஞர் இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறும்; அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் பேருந்து நிலையத்தைத் திறந்துவைப்பார்.

திராவிட முன்னேற்ற [illegible] கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை [illegible]